5. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழு — தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றபேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடு)

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 125 முதல் 130 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அந்த நேரம் எல்லாம் முடிந்துவிட்டது.

2003 ஜனவரி 30]

3. தகவல் கோரல் – தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு-தொடர்ச்சி.

திரு. மு.பெ. சாமிநாதன்: தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பது குறித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறைக்கு வாருங்கள், பேசுவோம்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) – தொடர்ச்சி

தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவு, 2003-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.